[21st November 1963

Appendix II.

[Vide answer to starred question No. 386 on page 439].

(*a*) Yes Sir.

(*b*) 6.

(*c*) Vigorous action is being taken to apprehend the accused ' Mammattian ' and his associates.

(*d*) Yes Sir.

(i) On 1st May 1960 a special party went to the reserve forest in Mettur limits to arrest Mammattian and his gang. On seeing the Police, the gang fired at the Police. Two of the members of the gang, Kannupian and Govindan, were killed when the Police opened fire in self-defence. The gang and Mammattian escaped in the forest with the loss of two men and two guns and ammunition.

(ii) There was an encounter between a Police party and the armed gangsters under Mammattian on 8th July 1963 morning in the reserve forest in Mettur limits, in which Sub-Inspector Sri Myilswami was injured by the gun fire of a gangster Lakshmanan who paid for it with his life when a Police constable shot at him in self-defence. Two members of the gang, Jogi and Krishna Poosari with guns and ammunition were arrested while the leader "Mammattian" managed to escape into the forest.

Further efforts are being made to arrest Mammattian and his associates.

(அ) தெரியும்.

(இ) 6.

(உ) எதிரி மம்மட்டியானையும் அவனது சகாக்களையும் கைது செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(எ) முயற்சி செய்தது.

(1) 1960-ம் வருஷம் மே மாதம் முதல் தேதியில் ஒரு விசேஷப் படை மம்மட்டியானையும் அவனது கூட்டத்தாரையும் கைது செய்ய மேட்டூர் எல்லைகளிலுள்ள ரிசர்வ் காட்டிற்குச் சென்றது. போலீசைக் கண்டவுடன், அக்கூட்டத்தார் போலீசை நோக்கிச் சுட்டனர். அக் கூட்டத்தைச் சேர்ந்த கண்ணுப்பையனும் கோவிந்தனும் போலீசார் தற்காப்புக்காகச் சுட்டபோது மாண்டனர். இரண்டு துப்பாக்கிகளையும், ரவைகளையும் போட்டுவிட்டு அவர்களும் மம்மட்டியானும் காட்டிற்குள் தப்பி ஓடிவிட்டனர்.

(2) 1963-ம் வருஷம் ஜூலை மாதம் எட்டாம் தேதியில் காலை ஒரு போலீஸ் படைக்கும் ஆயுதம் தாங்கிய மம்மட்டியான் கூட்டத்தினருக்கும் மேட்டூர் எல்லைகளில் உள்ள ரிசர்வ் காட்டில் சண்டை நடந்தது, அதில் சப்-இன்ஸ்பெக்டர் திரு. மயில்சாமி என்பவர் கொள்ளைக்காரனின் துப்பாக்கிக் குண்டால் காயமடைந்தார். அதே சமயம் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் தற்காப்புக்காகச் சுட்டபோது கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த லட்சுமணன் என்பவன் மாண்டுவிட்டான். அக் கூட்டத்தைச் சேர்ந்த ஜோகியும் கிருஷ்ணபூசாரியும் துப்பாக்கிகளுடனும் ரவைகளுடனும் கைது செய்யப்பட்டனர். ஆனால், கூட்டத்தின் தலைவனான மம்மட்டியான் காட்டிற்குள் தப்பி ஓடிவிட்டான்.

மம்மட்டியானையும் அவன் சகாக்களையும் கைது செய்ய மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.